## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் 28.10.2021 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.**

**மன்றப் பொருள்**

**1.** நகராட்சி ஆணையாளரின் அக்டோபர்–2021 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 100 நாள்.28.10.2021**

**பதிவு செய்யப்பட்டது**

**2.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் கழிவு நீர்ப்பண்ணையில் உள்ள 20 ஏக்கரில் யானைப்புல் வளர்த்து அதன் பலன்களை அனுபவிக்கும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு நபர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளார்கள். மேற்படி ஏலத்தில் கோரியுள்ள கேள்வித் தொகையில் திரு.கண்ணப்பன் என்பவர் உயர்ந்த ஏலத் தொகையாக ரூ.7,25,000/– கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.கண்ணப்பன்<br>த/பெ.பழனியப்பன்,<br>5/205, கோரப்பள்ளம்,<br>காவேரிபுரம் அஞ்சல், மேட்டூர். | ரூ.7,25,000/- |
| 2. | திருமதி.மதுமதி,<br>க/பெ.A.அருள்பிரசாத்,<br>13/295, சக்தி நகர்,<br>புதுக்காலனி, மேட்டூர். | ரூ.7,23,000/- |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி உரிம இனத்திற்கு ஏலம் கோரிய இருவரில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.கண்ணப்பன், காவேரிபுரம் அஞ்சல், மேட்டூர் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ஆக ரூ.7,25,000/- க்கு கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.7,22,138/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.ரூ.6,88,296/- ஆகும். மேற்படி ஏலக்கேள்வியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.2,862/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.36,704/- கூடுதலாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை மூன்று முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எவரும் ஏலத்திலோ / ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளவில்லை. எனவே உயர்ந்த பட்ச ஏலத் தொகை கோரிய திரு.கண்ணப்பன், காவேரிபுரம் அஞ்சல், மேட்டூர் அவர்களின் ஏலக்கேள்வித் தொகையை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.3636/2020/அ2)

**தீர்மான எண். 101 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் தினசரி அங்காடியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.A.R.P.ஈஸ்வரி என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.12,52,999/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திருமதி.A.R.P.ஈஸ்வரி ,<br>15/3, கூலி லைன்,<br>மேற்கு மெயின் ரோடு,<br>மேட்டூர் | ரூ.12,52,999/- |
| 2. | திரு.கண்ணுசாமி<br>மேட்டூர் வட்டார அழுகும் பொருள் காய், கனி வியாபாரிகள் சங்கம்,<br>தினசரி மார்க்கெட்,<br>மேட்டூர். | ரூ.11,00,501/- |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.A.R.P.ஈஸ்வரி, மேட்டூர் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.12,52,999/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.15,99,726/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.ரூ.15,24,758/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.3,46,727/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.2,71,759/- குறைவாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை மூன்று முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வேறு எவரும் ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ கோரவில்லை. மேற்படி இனத்தினை துறை மூலம் வசூலிக்கும் போது வரும் வருவாய் மற்றும் செலவினம் பின்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| வருவாய் ஆய்வாளர் (பொ) அவர்களின் குறிப்பின் படி தினசரி மார்க்கெட்டில் கொரோனா காரணத்தினால் ஒவ்வொரு இடங்களிலும் காய்கறி கடைகள் உள்ளதால், தற்போது 85 கடைகள் மூலம் வசூலிக்கப்படும் வருவாய் நாள் ஒன்றுக்கு | ரூ.2,000/- |
| ஒரு ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் உத்தேச வருவாய் ( 2000x30=60000x12 ) | ரூ. 7,20,000/- |
| **கழிக்க**<br>நாள் 1க்கு மூன்று பணியாளர்களுக்கான ஊதியம் பொதுப் பணித்துறை ஊழியர்களின் தினப்படி ரூ.150/- வீதம் மூன்று பணியாளர்களுக்கு ரூ.450/- வீதம் உத்தேசமாக 450x30=13500x12 | ரூ. 1,62,000/- |
| செலவு போக உத்தேசமாக ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கும் வருவாய் | ரூ. 5,58,000/- |

பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை வழங்கிய திருமதி.A.R.P.ஈஸ்வரி அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூ.12,52,999/-க்கு வழங்கியுள்ளார். மேற்படி துறை மூலம் வசூலிக்கும் போது எதிர்பார்க்கப்படும் உத்தேச வருவாய் மற்றும் செலவினம் போக கிடைக்கும் வருவாய் ரூ. 5,58,000/-. எனவே இரண்டையும் ஒப்பிடும் போது துறை மூலம் வசூலிக்கும் தொகையை விட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையானது ரூ.6,94,999/- அதிகமாக உள்ளது. எனவே இந்நகராட்சியின் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை வழங்கியது திருமதி.A.R.P.ஈஸ்வரி, மேட்டூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 102 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் மீன் அங்காடியில் உள்ள **16** கடைகளில் இறைச்சிக் கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.V.சுந்தர் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.17,200/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.V.சுந்தர் த/பெ.வெங்கடேஸ்,<br>குருவக்காடு, T.M.P.நகர்,<br>புதுச்சாம்பள்ளி (அஞ்சல்), மேட்டூர் அணை. | ரூ.17,200/- |
| 2. | திரு.M.கார்த்திக்<br>42/6a-8a-1, ராஜகணபதி நகர்,<br>மேட்டூர். | ரூ.16,000/- |

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.V.சுந்தர், T.M.P.நகர், மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.17,200/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.33,461/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ..31,893/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.16,261/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.14,693/- குறைவாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை மூன்று முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எவரும் ஏலத்திலோ / ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்படி உரிம இனத்தில் தற்போது இரண்டு கடைகள் மட்டுமே உள்ளதாக வருவாய் ஆய்வாளர் (பொ) தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் இந்நகராட்சி நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை வழங்கிய திரு.V.சுந்தர், T.M.P.நகர், மேட்டூர் அணை அவர்களின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 103 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சிக்குச் சொந்தமான சேலம் கேம்ப் தினசரி அங்காடியில் இறைச்சிக் கடை **(எண்.9** மற்றும் **10** உட்பட) கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.ராஜா என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.32,500/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.K.ராஜா த/பெ.காளியப்பன்,<br>155/A4, ராஜிவ் நகர்,<br>சேலம் கேம்ப், மேட்டூர். | ரூ.32,500/- |
| 2. | திரு.P.நந்தகுமார் த/பெ.A.பெரியசாமி,<br>127/50A2, சேலம் கேம்ப்,<br>மேட்டூர். | ரூ.30,000/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.K.ராஜா , சேலம் கேம்ப், மேட்டூர். என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.32,500/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.30,870/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ..29,423/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.1,630/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.3,077/- கூடுதலாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை மூன்று முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எவரும் ஏலத்திலோ / ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளவில்லை. எனவே உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை வழங்கிய திரு.K.ராஜா , சேலம் கேம்ப், மேட்டூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 104 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் நவீன ஆடு வெட்டும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.V.சுந்தர் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.85,500/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.V.சுந்தர் த/பெ.வெங்கடேஸ்,<br>குருவக்காடு, T.M.P.நகர்,<br>புதுச்சாம்பள்ளி (அஞ்சல்), மேட்டூர் அணை. | ரூ.85,500/- |

| | | |
|---|---|---|
| 2. | திரு.K.ராஜா த/பெ.காளியப்பன்,<br>155/A4, ராஜிவ் நகர்,<br>சேலம் கேம்ப், மேட்டூர். | ரூ.81,000/- |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**1**ல் கண்டுள்ள திரு.V.சுந்தர், T.M.P.நகர், மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.85,500/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.81,420/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ..77,604/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.4,080/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.7,896/- கூடுதலாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை மூன்று முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எவரும் ஏலத்திலோ / ஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளவில்லை. எனவே உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை வழங்கிய திரு.V.சுந்தர், T.M.P.நகர், மேட்டூர் அணை அவர்களின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 105 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**7.** மேட்டூர் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2021-2022 (TURIP 2021-2022) - ன் கீழ் பழுதடைந்த சாலைகளை புதுபிக்க ரூ.**500.00** இலட்சம் மதிப்பீடு திட்ட தயார்செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP 2021-2022) திட்டத்தின் கீழ் ரூ.**500.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்தகு சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Ward No | Uni Code | Name of the road | Length in M | | | Width (M) | Estimate Cost (Rs.Lakhs) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | BT | CC | PB | | |
| 1 | 2 | 047002R004 | மேட்டூர் ரயில் நிலையம் வைத்தீஸ்வரா பள்ளி வடக்கு பக்க சாலை | 93.00 | | | 4.50 | 7.20 |
| 2 | 4 | 047004S005 | தங்கமாபுரிபட்டிணம் பெரியார் நகர் முதல் தெரு | | | 93.00 | 2.50 | 5.40 |
| 3 | 4 | 047004R044 | தங்கமாபுரிபட்டிணம் பெரியார் நகர் இரண்டாவது தெரு | | | 97.00 | 4.00 | 7.80 |
| 4 | 4 | 047004R045 | தங்கமாபுரிபட்டிணம் பெரியார் நகர் மூன்றாவது தெரு | | | 82.00 | 4.00 | 6.60 |
| 5 | 7 | 047007R081 | சேலம் கேம்ப் காமராஜர் நகர் காளியம்மன் கோயில் ரோடு | 362.00 | | | 7.00 | 39.00 |
| 6 | 8 | 047008R099 | அம்பேத்கர் நகர் தெற்கு பொது கழிப்பறை சாலை | 420.00 | | | 5.00 | 33.00 |
| 7 | 10 | 047010R151 | எம்ஜிஆர் நகர் முதல் தெரு | 105.00 | | | 4.00 | 6.60 |
| 8 | 12 | 047012R188 | மாதையன்குட்டை எலிக்கடு தெற்கு பிரதான தெரு | 574.00 | | | 5.00 | 45.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 13 | 047013R210 | சக்தி நகர் தெற்கு ஐந்தாவது தெரு | 220.00 | | | 6.00 | 20.50 |
| 10 | 14 | 047014R223 | TANGEDCO IB வடக்குப் பக்க சாலை | 248.00 | | | 7.00 | 27.00 |
| 11 | 17 | 047017R246 | சுப்பிரமணியர் கோவில் மேற்கு பக்கம் 1வது குறுக்கு தெரு | 137.00 | | | 6.00 | 38.00 |
| 12 | 17 | 047017R257 | காளியம்மன் கோவில் முன் பக்கம் வடக்கு தெரு | 56.00 | | | 5.00 | 4.80 |
| 13 | 20 | 047020R281 | சௌரியம்மாள் நகர் பிரதான சாலை | 360.00 | | | 5.00 | 27.80 |
| 14 | 20 | 047020R289 | பாரதி நகர் மெயின் ரோடு | 535.00 | | | 7.00 | 78.00 |
| 15 | 20 | 047020R295 | நேரு நகர் புதைகுழி வடக்குப் பக்க சாலை | 165.00 | | | 4.50 | 12.00 |
| 16 | 21 | 047021R301 | பாரதி நகர் தெற்கு சாலை | 125.00 | | | 5.00 | 10.40 |
| 17 | 21 | 047021R303 | பாரதி நகர் முதல் பொன்னகர் வரை இணைக்கும் சாலை | 470.00 | | | 6.00 | 52.00 |
| 18 | 22 | 047022R334 | பள்ளிவாசல் பிரதான வீதி | 160.00 | | | 6.00 | 15.00 |
| 19 | 25 | 047025R364 | இந்திரா நகர் ஸ்லாட்டர் ஹவுஸ் ரோடு | 223.00 | | | 4.20 | 15.60 |
| 20 | 28 | 047028R418 | சித்தாகாடு கிழக்கு பக்கம் முதல் கட் ரோடு | 220.00 | | | 4.00 | 14.50 |
| 21 | 30 | 047030R457 | குள்ளவீரன்பட்டி பிள்ளையார் கோவில் முதல் கொளத்தூர் மெயின் ரோடு வரை | 335.00 | | | 5.00 | 33.80 |
| | | | **Total** | **4808.00** | **0.00** | **272.00** | | **500.00** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556/ 2021 /இ1)**

**தீர்மான எண். 106 நாள்.28.10.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு அமைத்தல் பணியினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன் கீழ் மேற்கொள்ள ரூ.49.80 இலட்ச மதிப்பீட்டில் கீழ்கண்டுள்ளவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | LED விளக்குகள் | 260 | 16.50 |
| 2 | LED விளக்குகள் + EB LINE | 60 | 14.00 |
| 3 | LED விளக்குகள் + EB LINE+EB Pole | 45 | 19,30 |
| | மொத்தம் | | 49.80 |

2021–2022– ம் ஆண்டிற்கான கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கண்ட பணிகளை செயல்படுத்திட ரூ.49.80 இலட்ச மதிப்பீட்டில் திட்ட தயார்செய்யப்பட்டு நிதி ஓதுக்கிடு மற்றும் நிர்வாக அனுமதிக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2212/ 2021 /இ1)**
**தீர்மான எண். 107 நாள்.28.10.2021**

அனுமதிக்கப்பட்டது

**9.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினிப் பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளது. தற்போது பருவ மழை பெய்து வருவதால் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா நோய்கள் பரவி வருவதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும் அவசர அவசியம் கருதி பிளீச்சிங் பவுடர் – 3 டன் மற்றும் சுண்ணாம்புத்தூள் –5 டன் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் தனது 22.10.2021 ஆம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்டவாறு பிளீச்சிங் பவுடர் – 3 டன் மற்றும் சுண்ணாம்புத்தூள் –5 டன் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரப்பணிகளுக்கு தேவையான பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் ஆகிய கிருமி நாசினிப் பொருட்களை பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**2640**/20**21**/எச்1)
**தீர்மான எண். 108 நாள்.28.10.2021**

அனுமதிக்கப்பட்டது

**10.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு 32 எண்ணிக்கை பொது / சமுதாய கழிப்பிடங்கள் உள்ளது. இவற்றை சுத்தம் செய்து பராமரிக்க நகராட்சியில் போதிய தூய்மைப்பணியாளர்கள் இல்லாததால், 20 கழிப்பிடங்களை பொது மக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வரவும், அதற்காக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு சேவைக்கட்டணமாக ரூ.6,000/– அடிப்படையில் **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** என்ற தனியார் நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.3415/2020/எச்1, நாள்.01.12.2020–

ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு அதன் பணிக்காலம் 30.11.2021 உடன் முடிவடைகிறது. **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** நிறுவனம் தனது 18.10.2021 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பராமரித்து வரும் சேவைக்கட்டணத்தின் அடிப்படையில் 20 கழிப்பிடங்களை மேலும் ஓராண்டிற்கு பராமரித்து வர சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே, பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி கீழ்க்கண்ட 20 கழிப்பிடங்களை 01.12.2021 முதல் 30.11.2022 முடிய மேலும் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வர **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான சேவைக்கட்டணமாக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் 20 கழிப்பிடங்களுக்கு ரூ.1,20,000/– ஐ **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** அவர்களுக்கு வழங்கவும், இதற்காகும் ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.14,40,000/–ம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பொது / சமுதாய கழிப்பிடம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | தங்கமாபுரி பட்டினம் மார்க்கெட் | 3 |
| 2 | தங்கமாபுரி பட்டினம் (நியூ பார்ம் கீழ் தெரு) | 3 |
| 3 | பாரதி நகர் | 5 |
| 4 | காமராஜர் நகர் | 7 |
| 5 | காந்தி நகர் | 8 |
| 6 | மாதையன் குட்டை | 10 |
| 7 | ராஜாஜி நகர் | 10 |
| 8 | மீனவர் தெரு | 10 |
| 9 | எலிக்கரடு | 12 |
| 10 | அம்மன் நகர் | 12 |
| 11 | சக்தி நகர் | 13 |
| 12 | காவேரி நகர் | 17 |
| 13 | பாரதி நகர் | 21 |
| 14 | பிட்டர்மேன் குடியிருப்பு | 22 |
| 15 | கூலி லைன் முன்புறம் | 23 |
| 16 | கூலி லைன் பின்புறம் | 23 |
| 17 | தினசரி மார்க்கெட் | 24 |
| 18 | காவலர் குடியிருப்பு | 27 |
| 19 | குமரன் நகர் | 28 |
| 20 | கீழ் குள்ள வீரன் பட்டி | 29 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3415/2020/எச்1)

**தீர்மான எண். 109 நாள்.28.10.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** மேட்டூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 165 நிரந்தர தூய்மைப்பணியாளர் பணியிடங்களில் தற்போது 65 பணியாளர்கள் மட்டுமே பணி புரிந்து வருகின்றனர். 100 தூய்மைப்பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதால் குறைவான பணியாளர்களைக் கொண்டு நகரின் அனைத்து வார்டுகளிலும் பொது சுகாதாரப்பணிகளை திறம்பட செய்ய இயலாது என்பதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 47 ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு வார்டு எண்.20 முதல் வார்டு எண்.30 முடிய 11 வார்டுகளில் தூய்மைப்பணி செய்ய தனியார் நிறுவனமாகிய M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன் ஒப்பந்த காலம் 30.09.2021 உடன் முடிவடைய உள்ளது.

M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்கள் தனது 29.09.2021 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பணி செய்து வரும் விலை விகிதத்தின் அடிப்படையில் பணி புரிய சம்மதித்து மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளனர். மேட்டூர் நகராட்சி நகர மன்ற தீர்மானம் எண்.176, நாள். 30.12.2020–ல் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அனுமதி பெற்று, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கும் வரை M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்களின் மூலம் முந்தைய விலை விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 47 பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ளவும், மாதம் ஒன்றிற்கு அதற்காகும் தோராய செலவினம் ரூ.665849/– செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி 01.10.2021 முதல் 31.03.2022 முடிய 6 மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.40.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**3922**/2020/எச்1)

**தீர்மான எண். 110 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 06.10.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.K.குருசாமி என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.7,52,000/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை )** |
|---|---|---|
| 1. | திரு.K.குருசாமி<br>த/பெ.காவேரி கவுண்டர்,<br>75, அம்மன் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.7,52,000/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.K.குருசாமி, அம்மன் நகர், மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.7,52,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.11,62,035/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ..11,07,578/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.4,10,035/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.3,55,578/- குறைவாகவும் உள்ளது. மேலும் மேற்படி உரிம இனத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளதால் இவ்வினத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 111 நாள்.28.10.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**